அசல்

16.5.17. வே. முத்துஸாமிஐயன்

அசல் — 1 நகல் — 1

உ

Copied அருப்புக்கோட்டை

16 - 5 - 17

அன்புடையீர்!

தங்கள் தாயார் தேகவியோகம யெய்திய செய்தி கேட்டு மிகவும் வருந்துகின்றேன். தங்கள் கிருகத்திற்குச் சில சமயங்களில் நான் வரும் போது முதலில் அந்த அம்மையார் "யார்? ஐயா! என்ன வேண்டும்" என்று விசாரிப்பதுண்டு. அவ்வளவு பெரு சமயங்களில் அவர்களுடைய சாந்த நிலையும் கருணை மலர்ந்த முகவிலாசமும் எளியேன் மனத்தைக் கவர்ந்துள்ளன. தங்கள் திருத்தந்தையாருக்கு நெடுநாளாகத் துணையாயிருந்தும், தங்களுக்கு எல்லா மேலிய இனியதாயாக விளங்கியும் வந்தவர்களுடைய பிரிவு சகிக்கவொண்ணாததேயாகும். இச்சமயத்தில் தேறுதல் கூறமுன்வருதலும் பயனில கூறலாகுமென்றஞ்சுகின்றேன். எல்லாம் [illegible]மையாளனும் ஈசன் செயலென்றிருத்தலன்றி ஏழையேம் பிறிது யாது இயற்ற வல்லேம்!

மனைக்கு விளக்காகவும் விளங்கிய அத் திருவன்னை

அசல்

16.5.17. வே. முத்துஸாமிஐயன்

அசல்—1 நகல்—1

மன்றுளருகிருந்து வினையுலைதகைய்தி மேலவர் போற்றும் 'ஸுமங்கலாதேவி'யாயினர். தெய்வமாய் மாறிய அவர்களுடைய அருட்பார்வையால் தங்கள் குலம் மேலும் மேலும் ஆக்கமும் பெருமையும் அடைவதாகுக.

தங்கள் தவத்திருவையார்க்குச் சிறியேனது சாஷ்டாங்க நமஸ்காரத்தைத் தெரிவித்திடுக.

அடுத்த பக்கத்தில் இவ்விஷயமாகப் பாடிய இரண்டொரு சரம கவிகளைத் தங்கள் பார்வைக்கு அனுப்பியிருக்கின்றேன். பாட்டுக்குரியார் பெருமைக்கும் பாடிய அடியேன் சிறுமைக்கும் ஏறத்தாழ்வு எத்துணை தூரமுள்ளதென்பதை யான் உணர்ந்து உணர்ந்து என் செயற்கு வெட்குகின்றேன்.

இங்ஙனம் அன்பின் வழிய
நண்பன்

வே. முத்துஸாமிஐயன்
16.5.17

அசல்

16.5.17. வே. முத்துஸ்வாமிஐயன்

அசல் — 1 நகல் — 1

கொச்சகக் கலிப்பா

4\. சென்னை நகரின் சிறியேன் பெருவிருப்பால்
மன்னுதிரு மாளிகைக்கே வந்து வழிபடுங்கால்
துன்னுகலை நாயகர்க்குச் சொல்லுவதற் கென்விரம்
பொன்னனையாய்! கேட்டருளும் பொறுப்பு மறவேனே. (சு)

5\. மல்குபுகழ் நாதர்தாள் மாதேவர் / தாள் வணங்கித்
தொல்லுலகில் காக்கும் ~~சிறுங்கந்த~~ ~~தெய்வமோனார்~~ (லா, தெவிநியே)
பல்கிவளர் தண்ணளியால் பல்வழிநின் (நல்) வழியில்
அல்லிடக நல்லவையே அங்குகவல் லாதவையே. (ரு)
(* வழி - மரபு)

6\. வெண்பா

ஆண்டுபிறங் களவாக ஆண்டுமதி சித்திரையில்
நீண்டபிரு பானிரண்டு தேதியினில் — பூண்ட
தவவடிவாம் சாமிநா தையர் திருத்துணைவி
சிவனடியார் சேர்ந்த தினம்.

வே. முத்துஸ்வாமி ஐயன்
16-5-17
[illegible] [illegible]
பொக்கர்
அறப்புக்கோட்டை வட்டம்.

அசல்

16.5.17. வே. முத்துஸாமி ஐயன்

அசல் — 1 நகல் — 1

Copied

உ

ஸ்ரீமத் ஸ்ரீ 'மஹாமஹோபாத்யாயர்' வே. சாமிநாதையர்
அவர்களது வாழ்க்கைத் துணைவியார் மீது
இரங்கற் பாக்கள்

## அறுசீர்க்கழி நெடிலடி விருத்தம்

தமிழகத்தின் தவப்பயனைத் தரணியெலாம் வியந்தேத்துந் தகைமை சான்ற
அமிழ்துறழுஞ் சொற்புலவர் அரியமஹா மஹோபாத்தி யாயரென்னும்
அமைதிபொறை ஞானமுயல் வாதிய நற் குணக்குன்றை யடுத்துத் தாய்மை
கமழ்நற் றுகிற்* பகவல்லி! 'மதுராம்பிகைத் தாயே!! கடிதகல் குற்றாய்? (க)

ஒன்றுவரைக் கன்றுநன்று வாசுகிவாழ்க் கைத்துணையாம் வளமே போல
தென்று தமிழ்ப் பெரும்புலமைத் தேசொடுவெண் ணீற்றொளியுந் திகழக் கூறு
கொள்ளுமெழில் மெய்யவதிரங் குருநாதர் அகத்துள்ளே† கோதிலாத
ஒள்ளியநல் விளக்கமென ஒளிர்ந்திருந்த அன்னாய்!‡ நீ ஒளித்தலென்னே (உ)

விண்கொண்ட தேவர்முப் பத்துமுக் கோடியென மிடைந்தா ரேனும்
பண்கொண்ட மெய்ப்புலமை படைத்திலரப் பெயர்ப்புலவர்; பார்க்கில் அன்னார்
எண்கொண்ட மகளிர்க்கும் ஏற்றமிலை; இடுக்குண்டே; இவைநோக்காதெம்
கண்கொண்ட தெய்வமெனும் காதலரைப் பிரிந்து விண்ணிற் கரந்தலென்னே

* அகத்திற் கற்புடைய வல்லி. † அகம் - மனை; மனம். ‡ அன்னாய் - ஒப்புடையாய்; தாயே

நகல்

உ

பிரஹ்மஸ்ரீ
'மஹாமஹோபாத்யாயர்' வே. சாமிநாதையர்
அவர்களது வாழ்க்கைத் துணைவியார் மீது
இரங்கற் பாக்கள்.
(By Muthuswamy Iyer)

அறுசீர்க்கழி நெடிலடி விருத்தம்.

1. தமிழகத்தின் தவப்பயனாத் தரணியெலாம் வியந்தேத்தும்
தகைமை சான்ற
அமிழ்துறழுஞ் சொற்புலவர் அரியமஹா மஹோபாத்தி
யாய ரென்றும்
அமைதிபொறை ஞானமுயல் வாதியநற் குணக்குன்றை
யடுத்துத் தூய்மை
கமழ்தருகற்*பகவல்லீ! மதுராம்பி கைத்தாயே
கழிதெங் குற்றாய் ?௧

௨. வள்ளுவனார்க் கொன்றான வாசுகிவாழ்க் கைத்துணையாம்
வளமே போலத்
தெள்ளுதமிழ்ப் பெரும்புலமைத் தேசொடுவெண் ணீற்றொளி-
-யும் திகழக்கூறு
கொள்ளுமெழில் மெய்யவரெங் குருநாதர் †அகத்துள்ளே
கோதி லாத
ஒள்ளியநல் விளக்கமென ஒளிர்ந்ததிரு ‡அன்னாய்நீ
ஒளித்தல் என்னே (௨)

௩.
3. விண்கொண்ட தேவர்முப் பத்துமுக் கோடியென
மிடைந்தா ரேனும்
பண்கொண்ட மெய்ப்புலமை படைத்திலரப் பெயர்புலவர்;
பார்க்கில் அன்னார்
எண்கொண்ட மகளிர்க்கும் ஏற்றமிலை; இருக்குண்டேல்
இவை நோக்காதெம்
கண்கொண்ட தெய்வமெனுங் காதலரைப் பிரிந்துவிண்ணிற்
கரத்தல் நன்றே?

கொச்சகக் கலிப்பா.

4. சென்னை நகரிற் சிறியேன் பெருவிருப்பால்
மன்னுதிரு மாளிகைக்கே வந்து வழிபடுங்கால்
துன்னுகலை நாயகர்க்குச் சொல்லுவதற் கென்விவரம்
பொன்னனையாய்! கேட்டருளும் பொற்புமறந் தேனே. (௪)

* அகத்திற் கற்புடைய வல்லி. † அகம் - மனை, மனம். ‡ அன்னாய் - ஒப்புடையாய்; தாயே.

நகல்



அருப்புக்கோட்டை,
16-5-17

அன்புடையீர்!

தங்கள் தாயார் தேகவியோக மெய்திய செய்திகேட்டு மிகவும் வருந்துகின்றேன். தங்கள் கிருஹத்திற்குச் சில சமயங்களில் நான் வரும்போது முதலில் அந்த அம்மையார் "யார் ஐயா? என்ன வேண்டும்" என்று விசாரிப்பதுண்டு. அவ்விரண்டொரு சமயங்களில் அவர்களுடைய சாந்தநிலையும் கருணை மலர்ந்த முகவிலாசமும் எளியேன் மனத்தைக் கவர்ந்துள்ளன. தங்கள் திருத்தந்தையார்க்கு நெடுநாள் உற்ற துணையாயிருந்தும், தங்களுக்கு எல்லாமருளிய இனிய நற்றாயாக விளங்கியும் வந்தவர்களுடைய பிரிவு சகிக்க வொண்ணாததேயாகும். இச்சமயத்தில் தேறுதல் கூறமுயல்வதும் பயனில கூறலாகுமென்றஞ்சுகின்றேன். எல்லாம் நமையாளும் ஈசன் செயலென் றிருத்தலன்றி ஏழையேம் பிறிதியாது இயற்ற வல்லேம்!

மனைக்கு விளக்காக விளங்கிய அத் திருவன்னார் மண்ணுலகு நீத்து விண்ணுலகெய்தி நம்மவர் போற்றும் 'சுமங்கிலாதேவி' யாயினர். தெய்வமாய் மாறிய அவர்களுடைய அருட் பார்வையால் தங்கள் குலம் மேலும் மேலும் ஆக்கமும் பெருமையும் அடைவதாகுக.

தங்கள் தவத்தாதையார்க்குச் சிறியேனது சாஷ்டாங்க நமஸ்காரத்தைத் தெரிவித்தருளுக.

அடுத்தபக்கத்தில் இவ்விஷயமாகப் பாடிய இரண்டொரு சரமகவிகளைத் தங்கள் பார்வைக்கு அனுப்பியிருக்கின்றேன். பாட்டுக்குரியார் பெருமைக்கும் பாடிய அடியேன் சிறுமைக்கும் ஏற்றத் தாழ்வு எத்துணை தூரமுள்ள தென்பதை யான் உணர்ந்து உணர்ந்து நாண் செயற்கு வெள்குகின்றேன்.

இங்ஙனம்,
அன்பில் வலிய நண்பன்,
வே. முத்துஸாமி ஐயன்.
16.5.17

நகல்

இரங்கற்பாக்கள்
(முத்துசாமி ஐயர்)



5. மல்குபுகழ் நாதன்றான் மாதேவர் தாள்வணங்கித்
தொல்குலங் காக்கும் சாமிங்களா தேவரையே
பல்கி வழி தண்ணளியால் பல்வழிநின் நல்வழியால்
அல்கிடுக நல்லவையே அஃகுக அல்லாதவையே (௫)

வெண்பா.

ஆண்டுபிங் களவாக ஆண்டுமதி சித்திரையில்
நீண்டமிரு பானறும் தேதியினில் - பூண்ட
தவவடிவாம் சாமிநா தையர் திருத்துணைவா
சிவனடியாற் சேர்ந்த தினம்.

---

வே. முத்துசாமி ஐயன்.
16-5.17

பள்ளிக்கூடஸப் அஸிஸ்டன்ட்
இன்ஸ்பெக்டர்
அருப்புக்கோட்டைவட்டம்.

நகல்

அருப்புக்கோட்டை
வே. முத்துஸாமி ஐயர்
ஸ்கூல் இன்ஸ்பெக்டர்.
ஐயரவர்கள்
வாழ்க்கைத் துணைவி மீது இயற்றிய
இரங்கற் பாக்களும்
கடிதமும். 16.5.17

3. பக்.

F 326-330

ஸ்ரீ.

page 707 to 711.

31